




# கிறிஸ்துவின் வசனம்

ஆசிரியர்
B. அர்ச்சுனன்

இலங்கை ஆசிய சேவையில்

சத்தியவழி வானொலி



தமிழ் நிகழ்ச்சியைக் கேட்டு சத்தியத்தை தெரிந்துகொள்ளுங்கள்

ஒவ்வொரு வாரமும்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஞாயிறு | மாலை | 6.45 | - | 7.00 | செய்தியாளர் |
| வியாழன் | மாலை | 6.45 | - | 7.00 | பி. ஆர். சாமி |

மேலும் சத்தியவழி புத்தகங்களும், தபால் வழி பாடத்திட்டங்களும் பெற கீழ்கண்ட முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.


**P.R. SWAMY**
*CHURCH OF CHRIST*
**P.O.BOX 8405**
*BANGALORE - 560 084*
*Phone (080) 5463507*


அடிமைத்தனத்திலிருந்து விடுவித்த
ஆண்டவர் இயேசுவுக்கு ஸ்தோத்திரம்

1. கிறிஸ்து மூலமாய் தேவனுடைய சுதந்தரனாயுமிருக்கிறாய் கலா. 4:7.
2. கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலைகொண்டிருங்கள் கலா. 5:1.
3. நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார் கலா. 3:13.
4. கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார் கலா. 2:20.
5. சுயாதீனமுள்ளவளுக்கே பிள்ளைகளாயிருக்கிறோம் கலா. 4:31.
6. கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள் எபேசி. 2:13.
7. உன்னதங்களில் அவரோடேகூட உட்காரவும் செய்தார் எபேசி. 2:17.
8. அவருடைய இரத்தத்தினாலே நமக்கு தைரியம் . . . எபி. 10:20.
9. இந்த ஊழியத்திற்கு ஏற்படுத்தினபடியால் அவரை ஸ்தோத்தரிக்கிறேன் 1 தீமோ. 1:12.
10. அவருக்கு என்றென்றைக்கும் மகிமை உண்டாவதாக. ஆமென். எபி. 13:21.


*Published by*
WORLD LITERATURE PUBLICATIONS
POST BOX.5
*BATLAGUNDU - 624 202*
*INDIA*

# கிறிஸ்துவின் வசனம்

*WORD OF CHRIST*

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் 6 | அக்டோபர் 1997 | கனி 3


ஆசிரியவுரை

## சிலுவை
## The Cross

சிலுவை என்றாலே கிறிஸ்தவ மதத்தின் சின்னம் என்று அநேகர் நினைக்கின்றனர். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டார் என்பது யாவரும் அறிந்த உண்மை. ஏன் அறையப்பட்டார்? எதற்காக அறையப்பட்டார்? என்று கேட்கிறீர்களா? மனிதனுடைய பாவத்தைப் போக்க ஒரே பலியாக கிறிஸ்துவை தேவன் மனுக்குலத்திற்கு ஒப்புக்கொடுத்தார். “நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார். அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்” என்று I பேதுரு 2:24ல் வாசிக்கின்றோம். நாம் பிழைக்கும்படி நம்முடையப் பாவங்களைச் சிலுவையில் சுமந்து தீர்த்தார். இந்த உபதேசம் பலருக்கு பைத்தியமாயிருக்கிறது.

நம்முடைய முற்பிதாக்களாகிய இஸ்ரவேலர் மோசேக்கும், தேவனுக்கும் விரோதமாக முறுமுறுத்தார்கள். ஆகையால் தேவன் அவர்களை கொள்ளிவாய் சர்ப்பங்களுக்கு ஒப்புக்கொடுத்தார். அதனால் அநேகர் கடிபட்டு இறந்தார்கள். பின்பு அவர்கள் மோசேயிடம் முறையிட அவன் “ஒரு வெண்கலச் சர்ப்பத்தை உண்டாக்கி, அதை ஒரு கம்பத்தின் மேல் தூக்கி வைத்தான்; சர்ப்பம் ஒருவனைக் கடித்தபோது, அவன் அந்த வெண்கலச் சர்ப்பத்தை நோக்கிப் பார்த்து பிழைப்பான்” என்றான் (எண்ணாகமம் 21:9). அதைப்போல “சர்ப்பமானது மோசேயினால் வனாந்தரத்திலே உயர்த்தப்பட்டது போல மனுஷகுமாரனும் தன்னை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, உயர்த்தப்பட வேண்டும்” (யோவான் 3:14-15). ஆகையால் இயேசுவும் சிலுவையில் உயர்த்தப்பட்டார். அவரை விசுவாசிக்கிறவன் பிழைப்பான்.

சிலுவையில் தொங்கிய இயேசுவையும், அவருடைய உபதேசத்தையும் பல பிரிவினை கிறிஸ்தவர்கள் விட்டு விட்டு சிலுவையை ஆலயங்களிலும், வீடுகளிலும் வைத்து தொழுது கொள்ளுகிறார்கள். "மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார்" என கலாத்தியர் 3:13ல் பார்க்கின்றோம்.

இன்றைக்குச் சிலுவையை வைத்து ஆராதிக்கிற கிறிஸ்தவர்களைப் போல அன்றைய நாட்களில் இஸ்ரவேல் புத்திரர் யூதாவின் 13வது இராஜாவாகிய எசேக்கியாவின் காலம் வரை மோசே உண்டுபண்ணின வெண்கல சர்ப்பத்தை வைத்து அதற்குத் தூபங்காட்டி வந்தார்கள். (II இராஜா 18:3-6). இதை அறிந்த எசேக்கியா இராஜா இந்த வெண்கல சர்ப்பத்தை உடைத்துப்போட்டான். அவனைப்போல ஒரு இராஜாவும் முன்னும் பின்னும் இருந்ததில்லை. மேலும் கர்த்தர் மோசேக்குக் கற்பித்த அவருடைய கற்பனைகளைக் கைக்கொண்டு நடந்தான் என்று வாசிக்கிறோம். பிரியமானவர்களே ! நீங்கள் சிலுவையைப் பற்றிக் கொண்டிருக்கிறீர்களா? அல்லது சிலுவையைப் பற்றிய உபதேசத்தைப் பற்றிக் கொண்டிருக்கிறீர்களா? சிந்தித்து தீர்மானம் எடுங்கள். "கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான்" (ரோமர் 10:13).

❄ ❄ ❄ ❄ ❄ ❄

## இரட்சிப்பிற்குரிய திறவுகோல்கள்

### THE KEYS TO SALVATION

| | | |
|---|---|---|
| சுவிசேஷத்தைக் கேள் | – | ரோமர் 10:17 |
| சுவிசேஷத்தை விசுவாசி | – | யோவான் 3:16 |
| உன் பாவத்திற்காக மனந்திரும்பு | – | லூக்கா 13:3 |
| கிறிஸ்துவை அறிக்கையிடு | – | மத்தேயு 10:32 |
| ஞானஸ்நானம் பெற்றுக்கொள் | – | மாற்கு 16:16; அப்போஸ்தலர் 2:38 |
| உண்மையாயிரு | – | வெளிப்படுத்தின விசேஷம் 2:10 |

*The Voice of Truth International*

# பெண்கள் பகுதி

## ஒரு ஸ்திரீ தன் புருஷனை ஆளலாமா?
## CAN A WOMAN RULE HER HUSBAND?

இன்றைய நவீன உலகில் இக்கேள்விக்கு எப்படி பதில் சொல்வது என்ற குழப்பம் எழும்பலாம். உலகில் எங்கு பார்த்தாலும் பெண்கள் முன்னேற்றத்துக்கென்று பல இயக்கங்கள் தோன்றியுள்ளன. ஆணுக்குப் பெண் சளைத்தவள் அல்ல என்ற நிலை தலைதூக்கி உள்ளது. ஆனால் வேதம் இது குறித்து நமக்கு என்ன அறிவுறுத்துகிறது என்று ஆராய்ந்து பார்ப்பது மிக அவசியம்.

பரிசுத்த வேதாகமத்தின் முதல் புத்தகமாகிய ஆதியாகமம் 3:16ல் கர்த்தர் ஸ்திரீயை நோக்கி "அவன் உன்னை ஆண்டுகொள்ளுவான் என்றார்." ஆம், புருஷன் தன் மனைவியை ஆண்டுகொள்ளுவது தேவனுடைய சித்தமாயிருக்கிறது. ஏனெனில் "தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனை தேவசாயலாகவே சிருஷ்டித்தார்" (ஆதி. 1:27). ஆனால் மனுஷியோ மனுஷனிலிருந்து எடுக்கப்பட்டவள். இப்படிப்பட்ட ஸ்திரீயானவள் தேவ சாயலாக உண்டாக்கப்பட்ட தன் புருஷன் தன்னை ஆண்டுகொள்ளும்படி விட்டு விடுவது தேவசித்தமாயிருக்கிறது.

அநேக குடும்பங்களில் இவ்விதமாக புருஷனின் ஆளுகைக்குள் மனைவியானவள் இருப்பதில்லை. மாறாக புருஷன்மேல் அதிகாரம் செலுத்தி தன் இஷ்டப்படியே புருஷன் செயல்பட வேண்டுமென்று புருஷனை ஆண்டுகொண்டிருக்கிறார்கள். அன்பான சகோதரிகளே! இது தேவசித்தத்திற்கு முரணானது. ஸ்திரீயானவள் புருஷனுக்கு நல்லாலோசனையைக் கொடுக்கும் ஏற்றதுணையாக இருக்க வேண்டுமென்றே தேவன் விரும்புகிறார். ஒருவேளை, தன் புருஷன் காரியசித்தியுள்ளவரல்ல. ஆகவே எல்லாப் பொறுப்புகளையும் நானே கவனித்து கொள்ள வேண்டும் என்று கூறுவோமேயானால் அது நமது யுக்திக்கே நலமானதாக இருக்கும். பவுல் I தீமோத்தேயு *2:12-13*ல் "உபதேசம் பண்ணவும், புருஷன்மேல் அதிகாரஞ் செலுத்தவும், ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை; அவள் அமைதலாயிருக்க வேண்டும். என்னத்தினாலெனில், முதலாவது ஆதாம் உருவாக்கப்பட்டான், பின்பு ஏவாள் உருவாக்கப்பட்டாள்" என்று கூறுகிறார்.

ஸ்திரீயானவள் பலவீனப்பாண்டமாயிருக்கிறபடியால் பிசாசானவன் எளிதில் நம்மூலம் நம் குடும்பத்தில் புகுந்து பெரிய இழப்பைக் கொண்டுவந்து விடுவான். பாருங்கள்! ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாயானவளாகிய ஏவாள் மூலம்

குடும்பத்தில் பிசாசு புகுந்து பெரிய சாபமே உலகத்திற்கு வந்தது. தேவன் விலக்கின கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தான்; அவனும் புசித்தான் (ஆதியாகமம் 3:6). எவ்வளவு சாமர்த் தியமாய் தன் புருஷனை தனக்குக் கீழ்ப்படியச் செய்துவிட்டான் !

அன்பான சகோதரிகளே ! நாம் எப்படியிருக்கிறோம்? இந்த ஏவாளைப் போல தேவகட்டளைக்கு விரோதமாய் செயல்படுகிறோமா? அல்லது விசுவாசிகளின் தாயாகிய சாராள், ஆபிரகாமை ஆண்டவன் (ஆண்டுகொள்பவன்) என்று சொல்லி அவனுக்குக் கீழ்ப்படிந்திருந்ததைப் போல (1 பேதுரு 3:6) புருஷனுடைய ஆளுகைக்கு நம்மை விட்டுக்கொடுக்கிறோமா? சிந்திப்போம். தேவ வசனத்திற்குக் கீழ்ப்படிந்து சாபத்தையல்ல ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வோமாக !

❁ ❁ ❁ ❁ ❁ ❁

குறுகிய கால தபால்வழி வேதபாடம் படிக்க விரும்புகிறவர்கள் கீழ்கண்ட முகவரிகளுடன் தொடர்பு கொள்க.


**MADURAI CENTRAL CHURCH OF CHRIST**
*P.O.BOX.2*
*ELLIS NAGAR*
*MADURAI - 625 010.*
*Phone (0452) 700197*

**KANGAYAM CHURCH OF CHRIST**
*P.O.BOX.27*
*KANGAYAM - 638 701*
*Phone (04257) 20030*





**செப்டம்பர் மாத இதழின் வேத அறிவுப்போட்டியில் வெற்றி பெற்றவர்கள் :**

1. S.மேரி எலிசபெத் கலைவாணி – வத்தலக்குண்டு
2. N.தானியேல் தமிழ்வாணன் – மேல்விசாரம்
3. S.எஸ்தர் – சமாதானபுரம்

செப்டம்பர் மாத இதழின் விடைகள் :

1. சோதித்துப் பார்க்கும் – யோபு 34 : 3
2. வானத்தின், பூமியின், இராஜாக்களின் – நீதி. 25 : 3
3. இஸ்ரவேலர் – எரேமியா 2 :13
4. கிறிஸ்து – கலாத்தியர் 4 : 7
5. நற்கிரியைகளை – எபேசியர் 2 :10
6. நாபால்
7. கிறிஸ்து
8. புத்தி
9. சுதந்தரமாகிய
10. வானமும், பூமியும்.

# கர்த்தருக்குப் பயப்படுகிற பயம் எங்கே?

## WHERE IS THE FEAR OF THE LORD?

*S. செங்கோல் ராயன்*

உலகதோற்றமுதல் இதுவரையிலும் தொடர்ந்து, நாள்தோறும் பெருகிக்கொண்டே வருகின்ற கொடூரமான வன்முறைகள், படுகொலைகள், கொள்ளைகள், ஜாதி இன கலவரங்கள், சமுதாய சீர்கேடுகள், வஞ்சகம், ஏமாற்றுதல், பொய் பித்தலாட்டங்கள், லஞ்ச ஊழல்கள், வரதட்சணை கொடுமைகள், குடும்ப சீரழிவுகள், பழிவாங்கும் தீய செயல்கள், காமவெறியாட்டாங்கள், தகாத உறவுகள், கற்பழிப்பு சம்பவங்கள், தவறான போதை பழக்க வழக்கங்கள், கீழ்ப்படியாமையின் ஒழுங்கீனங்கள், மதம் என்ற பெயரில் நடைபெறுகின்ற அட்டூழியங்கள், மற்றும் எல்லா நாச மோச செயல்களும், விபரீதங்களும் ஏன் ஏற்படுகிறது? இதுபோன்ற துணிகரமான, வெளியரங்கமான பாவங்களும் மற்றும் மறைவான, அந்தரங்கமான பல தீய குற்றங்களும் ஏன் மனிதனை தொடர்ந்து பிடிக்கின்றன? இவைகளுக்கெல்லாம் ஒட்டுமொத்த காரணம் தான் என்ன? என்பதை நிதானமாக ஆராயந்து, அதற்கான விபரத்தை ஒரே வரியில் சுருக்கமாகவும், மிக ஆணித்தரமாகவும் பதில் சொல்ல வேண்டுமானால், இந்த உலகத்தின் ஜனங்களுக்கு தெய்வ பயமில்லை என்ற காரணத்தையே அறியமுடியும். இதைக் குறித்து பரிசுத்த வேதாகமத்தின் இரண்டு பாகங்களான பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் "அவர்கள் கண்களுக்கு முன்பாக தெய்வ பயமில்லை என்று எழுதியிருக்கிறதே" (சங்கீதம் 36:1; ரோமர் 3:10-18).

### யாருக்குப் பயப்பட வேண்டும்?

பொதுவாகவே மனிதர்கள் பயப்படும் காரியங்கள் பலவிதமுண்டு. அவைகளில் நியாயமில்லாத, அர்த்தமற்ற, காரணமில்லாத பயங்களும் உண்டு. உடல்ரீதியாகவோ அல்லது மனரீதியாகவோ தங்களிலும் அதிக வலிமை, மேலான அதிகாரம், அந்தஸ்து, பதவி, செல்வாக்கு உள்ளவர்களுக்குப் பயப்படுவதும்; சரீரத்தில் அவ்வப்பொழுது ஏற்படுகின்ற பற்பல வியாதிகள், கொடிய நோய்களுக்குப் பயப்படுவதும்; உலகத்தின் சரீர வாழ்வுக்கு முடிவு கட்டுகிற மரணத்திற்கும் மற்றும் பேய், பிசாசு போன்ற அசுத்த ஆவிகளைப் பற்றிய பீதியிலும்; மதசார்பான விஷயங்களில் நம்பத்தகாத ஆதாரமற்ற கற்பனையான கட்டுக்கதைகளுக்கும், மனிதர்களுடைய கைவேலைப்பாடுகளான ஊமையான விக்கிரகங்கள், சிற்பங்கள், சித்திரங்களுக்கும், மாயமந்திரங்கள், பில்லிசூனியத்திற்கும் பயந்து நடுங்குவார்கள். இதுபோன்ற அர்த்தமற்ற பயங்கள் ஒன்றான மெய்தேவனை அறியாதவர்களுக்கும்,

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியாதவர்களுமாகிய அவிசுவாசிகள் நித்திய தண்டனைப்படும் இப்படிப்பட்ட பயமுள்ளவர்கள் அனைவரும் அக்கினிக்கடலாகிய நரகத்திலே தான் பங்கடைவார்கள் (வெளி.21:8). எனவே நாம் யாருக்குப் பயப்பட வேண்டும் என்று இயேசு மிக அருமையாக கூறியிருக்கிறார்.

"ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம்; ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்" (மத்தேயு 10:28).

**கர்த்தருக்கு ஏன் பயப்பட வேண்டும்?**

வேலைக்காரர்கள் தங்கள் எஜமான்களுக்கும், மந்தைகள் தங்களை மேய்ப்பவருக்கும், பிள்ளைகள் தங்கள் பெற்றோர்களுக்கும், சீஷன் தன் குருவுக்கும், சமுதாயம் அதனுடைய சட்ட திட்டங்களான மேலான அதிகாரங்களுக்கும் உட்பட்டு, மதித்து, கீழ்ப்படிய வேண்டியதைப் போலவே மானிடராய் பிறந்த ஒவ்வொருவருமே தங்கள் சிருஷ்டிகராகிய ஆவியாயுள்ள மெய்யான தேவனுக்கு முன்பாக பயந்து அவருடைய உபதேசங்களைக் கைக்கொண்டு முற்றிலும் அவருக்கே கீழ்ப்படிய வேண்டியது அவசியமாகின்றது. ஏனெனில்

அவரே சகலவற்றையும் சிருஷ்டித்த மேலான தேவன். அவருக்கு ஒப்பானவன் ஒருவனுமில்லை (எரேமியா 10:6,7; சங்கீதம் 33:6-19; 89:6,7).

மனிதனோ மண்ணிலிருந்து உண்டாக்கப்பட்டவன், தேவனோ வானாதி வானங்களுக்கும் உயர்ந்தவரும், பெரியவரும், மிகவும் ஸ்தோத்தரிக்கப்பட்டவரும், பயங்கரமுமான தேவன். ஆதலால் மனிதர்கள் அவருக்குப் பயப்பட வேண்டும் (ஏசாயா 33:5,6; சங்கீதம் 96:4,9).

வல்லமையும், பராக்கிரமும், பயங்கரமான மகத்துவமும் அவரிடத்தில் உண்டு (யோசுவா 4:23,24; யோபு 37:22-24; சங்கீதம் 76:7-10).

தேவனுக்கு நிகரான அல்லது விரோதமான ஞானமும், புத்தியும், ஆலோசனையும் இல்லை (நீதிமொழிகள் 21:30; யோபு 38,39 அதிகாரங்கள், ஏசாயா 40:13-18).

ஆவிகளின் பிதாவும், எஜமானரும் அவரே (மல்கியா 1:6; எபிரெயர் 12:9).

அவர் அற்புதரும், மகிமையானவைகளையும், பலத்த காரியங்களைச் செய்கிறவராயிருக்கிறார் (1 சாமுவேல் 12:24).

அவர் ஜீவனுள்ளவரும், என்றென்றும் நிலைத்திருக்கிறவராயிருக்கிறார் (தானியேல் 6:26).

அவருக்குப் பயப்படும்படிக்கு அவரிடத்தில் மன்னிப்பும், மிகுந்த இரக்கமும் உண்டு (சங்கீதம் 130:3,4).

மரித்த எல்லோரையும் உயிரோடு எழுப்புகிற தேவனாக இருக்கிறார் (1 கொரிந்தியர் 6:14; 1 தெச. 4:14).

நியாயத்தீர்ப்பு அவரிடத்தில் இருக்கிறது (வெளி. 14:7; 1 பேதுரு 1:17).

அவருக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை, சகலமும் அவருக்கு முன்பாக வெளியரங்கமாயிருக்கிறது (எபிரெயர் 4:13; சங்கீதம் 139:1-16).

சகல ஜனங்களும் அவருக்கு முன்பாக கணக்கு ஒப்புவிக்க வேண்டும் (ரோமர் 14:12).

அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன் (அப்போஸ்தலர் 10:34,35).

அவருக்குப் பயந்து, அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே எல்லா மனுஷர்மேலும் விழுந்த கடமை (பிரசங்கி 12:13).

இன்னும் இதுபோன்ற அத்தியாவசியமான காரணங்களினால் மனிதனானவன் கர்த்தருக்கு முன்பாக பயந்து வாழ கற்றுக்கொள்ள வேண்டும் (சங்கீதம் 2:11).

### கர்த்தருக்குப் பயப்படும் பயம் எது?

கிறிஸ்தவத்திலே காணப்படுகின்ற எல்லா நாமகரண பிரிவினைக் கூட்டத்தாரிடத்திலும் கர்த்தருக்குப் பயப்படும் பயம் தவறாக போதிக்கப்பட்டு, தாறுமாறாக அவரவர் மனப்போக்கின்படியே பின்பற்றப்படுகிறது. இது வேதவசனத்திற்கு நேர் எதிரான செயலாகும். எனவே கர்த்தருக்குப் பயப்படும் பயம் எது? என்ற கேள்விக்கான சரியான பதிலை அறிவதற்கு முன், எவைகளெல்லாம் கர்த்தருக்குப் பயப்படும் ஆகாது என்பதை முதலில் புரிந்து கொள்வது நல்லது. தேவசித்தத்திற்கு எதிரான எந்த செய்கையுமே கர்த்தருக்குப் பயப்படும் பயமாகாது (மத்தேயு 7:21-27). அதாவது கிறிஸ்தவம் என்ற பெயரில் கைக்கொள்கின்ற விக்கிரக ஆராதனைகள், குழந்தை ஞானஸ்நானம், புனிதர்களுடைய வழிபாடுகள், பண்டிகை, திருவிழா கேளிக்கைகள், பாரம்பரிய கொள்கைகள், சம்பிரதாய சடங்காச்சாரங்கள், மார்க்க விஷயங்களில் சொந்த அபிப்பிராய பேதங்கள், கற்பனையில் தோன்றுகின்ற உபதேசங்கள் மற்றும் கர்த்தர் கட்டளையிடாத மனித சட்டங்கள் போன்ற வேத வசனத்திற்கு மாறான கொள்கைகளை எத்தனை திரளான கூட்டத்தார் பின்பற்றினாலும், அவைகளை எவ்வளவு தான் பயத்தோடும், பக்தியோடும், பரவசத்தோடும், பணிவோடும், மனஉறுதியோடும் செய்தாலும் அவையாவும் தேவபக்தியாகவோ அல்லது கர்த்தருக்குப் பயப்படும் பயமாகவோ ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. இப்படிப்பட்டவர்களைக் குறித்து தேவன், ஏசாயா என்னும் தீர்க்கதரிசி மூலமாக, "இந்த ஜனங்கள் தங்கள் வாயினால்

என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள்; அவர்கள் இருதயமோ தூரமாய் விலகியிருக்கிறது; அவர்கள் எனக்குப் பயப்படுகிற பயம் மனுஷராலே போதிக்கப்பட்ட கற்பனையாயிருக்கிறது" (ஏசாயா 29:13; 57:11,12) என்று கூறியுள்ளார்.

எனவே கர்த்தரைப் பற்றும் பயமும், தேவபக்தியும் வெறும் வெளிப்படையான பரவசத்தினாலோ அல்லது உள்ளத்தில் ஏற்படுகின்ற உணர்ச்சிகளின் அடிப்படையிலோ மற்றும் சொந்த அனுபவங்களின் சாட்சியாகவோ காணப்படாமல் ஆவியாகவும், ஜீவனுள்ளதாகவும், வல்லமையுள்ளதாகவும், இருபுறமும் கருக்குள்ள பட்டயமாகவும் உள்ள தேவனுடைய கிருபையுள்ள வசனங்களின் அடிப்படையில் மட்டுமே சார்ந்ததாகக் காணப்பட வேண்டும் (ஏசாயா 66:2). தீமையை வெறுப்பதும் (நீதி. 8:13), பொல்லாப்பை விட்டு நீங்குவதும் (யோபு 28:28), கர்த்தருடைய வார்த்தைக்கு மட்டுமே செவிகொடுத்து (நீதி.1:33; மத்தேயு 17:5), கீழ்ப்படிவதுமே (ஆதி. 22:12; 1 சாமுவேல் 15:22; ஏசாயா 11:2,3) கர்த்தருக்குப் பயப்படும் பயம் ஆகும். உதாரணமாக ஒருவன் தேவசித்தத்தின்படியே முதலாவது கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு (1 கொரி. 15:1-4) கீழ்ப்படிந்து, பாவமன்னிப்பின் நிச்சயத்தைப் பெற்றுக்கொள்வதும் (1 தீமோ. 2:4; மாற்கு 16:16) பின்பு தொடர்ந்து தேவபக்தியோடே முடிவுபரியந்தமும் கிறிஸ்துவின் ஐக்கியத்தில் நிலைத்திருந்து, நாள்தோறும் தன் இரட்சிப்பு நிறைவேற பிரயாசப்படுவதுமே கர்த்தருக்குப் பயப்படும் பயம் ஆகும் (பிலிப்பியர் 2:12; மத்தேயு 24:13; நீதி. 28:14; நீதி. 23:17).

**கர்த்தருக்குப் பயப்படுவதால் என்ன நன்மை?**

கர்த்தருக்குப் பயப்படுவதால் கணக்கற்ற நன்மைகளையும், ஆசீர்வாதங்களையும் பெறலாம். ஏனெனில் தமக்குப் பயப்படுகிறவர்களுக்கும், தம்மை நம்புகிறவர்களுக்கும் தேவன் உண்டுபண்ணி வைத்திருக்கிற நன்மை எவ்வளவோ பெரிதாக, மிகுதியாக இருக்கிறது (சங்கீதம் 31:19).

கர்த்தருக்குப் பயப்படுகிறவனுக்கு எவ்வித குறைவுமில்லை (சங்கீதம் 34:9-11).

கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம் (நீதி. 1:7; 9:10; 15:33).

கர்த்தருக்குப் பயப்படுகிறவனுக்கு நித்திய ஜீவனுண்டு; தீமை அவனை அணுகாது (நீதி. 19:23; 10:27).

கர்த்தருக்குப் பயப்படுதல் ஜீவ ஊற்று; அதினால் மரணகண்ணிகளுக்குத் தப்பலாம்; அவனுக்கு திட நம்பிக்கை உண்டு (நீதி. 14:26,27).

கர்த்தருக்குப் பயந்தவர்களுடைய நாமங்கள் ஞாபகப்புத்தகமாகிய ஜீவபுத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது (மல்கியா 3:16; பிலிப்பியர் 4:3).

சான்றோர்களே உங்கள் வாழ்க்கையில் கர்த்தருக்குப் பயப்படுதலைத் தெரிந்துகொண்டு, கணக்கற்ற ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வீர்களாக.

## ஆசிரியர் கடிதம்

இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். தங்களுக்கு பத்திரிக்கை அனுப்புவது குறித்து நாங்கள் மிக்க மகிழ்ச்சி அடைகிறோம். ஆனால் சிலரிடமிருந்து பதில் வராதது குறித்து வருத்தப்படுகிறோம். வருடத்திற்கு 12 இதழ் இலவசமாக பெறுகிற நீங்கள் எங்களோடு ஒரு 25 பைசா கார்டு மூலம் தொடர்பு கொள்ளக் கூடாதா? பத்திரிக்கையை குறித்த உங்கள் கருத்துக்களையும், ஆலோசனைகளையும் வரவேற்கிறோம். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

அன்புடன்
ஆசிரியர்

## இம்மாத வேத அறிவுப்போட்டி !

முதல் ஐந்திற்கு வசன ஆதாரத்துடனும், கடை ஐந்திற்கு வேதத்திலிருந்து விடைமட்டும் எழுதி இம்மாதம் 30ம் தேதிக்குள் அனுப்பி வைக்கவும்.

1. இவனை நாவினாலே வெட்டிப் போடுவோம் வாருங்கள் என்று எந்த தீர்க்கதரிசிக்கு விரோதமாய் ஆலோசனை பண்ணினார்கள்?
2. மோசே பண்ணியிருந்த வெண்கல சர்ப்பத்தை உடைத்துப்போட்டு அதற்கு நிகுஸ்தான் என்று பெயரிட்டவன் யார்?
3. இயேசுவை கடிந்துகொள்ளத் தொடங்கின சீஷன் யார்?
4. நசரேயருடைய மதபேதத்துக்கு முதலாளியாகவும் இருக்கிறானென்று யாரை யார் சொல்வது?
5. தேகத்தை விட்டுப்பிரிந்து, கிறிஸ்துவுடனேகூட இருக்க எனக்கு ஆசையுண்டு என்று சொல்லிய அப்போஸ்தலன் யார்?
6. கர்த்தருடைய வழிகள் செம்மையானவைகள், யார் அவைகளில் நடப்பார்கள்? யார் அவைகளில் இடறிவிழுவார்கள்?
7. இரண்டு முறை விற்கப்பட்டவன் யார்?
8. வேலையாள் எதற்குப் பாத்திரனாயிருக்கிறான்?
9. இருமனமுள்ளவன் தன் வழிகளிலெல்லாம் எப்படிப்பட்டவனாயிருக்கிறான்?
10. இயேசுவினிடத்தில் வந்து அவர் மரித்திருக்கிறதைக் கண்டு அவருடைய காலெலும்புகளை முறித்தார்களா?

ஒருவன் என் வார்த்தையைக் கைக்கொண்டால், அவன் என்றென்றைக்கும் மரணத்தைக் காண்பதில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார் - இயேசு (யோவான் 8:51).

**MONTHLY MAGAZINE**

Regd. No. 84661 - 92

Postal Regn. No.TN/DDL/19

**Edited by B.Arjunan on behalf of Church of Christ**

2.2.102-D/5 Rajan Nagar

*Batlagundu and Printed at Novelty Press for Shanthi Printers*

**BATLAGUNDU - 624 202.**

எங்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்க அன்புடன் அழைக்கின்றோம்

ஞாயிறு காலை 9.00 மணி

வியாழன் மாலை 6.45 மணி



**கிறிஸ்துவின் சபை**

*2.2.102–D/5 ராஜன்நகர்*

வத்தலக்குண்டு - 624 202

திண்டுக்கல் மாவட்டம்.

Phone: (04543) 23278

From

WORD OF CHRIST

*POST BOX NO.5*

BATLAGUNDU - 624 202

*S.INDIA.*

To